வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 06.09.2025 சனிக்கிழமை | இதழ் : 249 | பக்கங்கள் : 08

# கால் மடித்து உட்கார்ந்த நிலையில் செம்மணியில் எலும்புக்கூடு மீட்பு!

## செம்மணியில் நேற்றும் ஐந்து எலும்புக்கூடுகள் அடையாளம்

- இ. ராஜ்குமார், த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 06

**செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகளின்போது நேற்று வெள்ளிக்கிழமை குவியலாக எட்டு மனித என்புதொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவற்றை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது அவற்றுள் ஒரு மனித என்புக்கூட்டு தொகுதி கால்கள் மடிக்கப்பட்டு உட்கார்ந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.**

செம்மணி மனித புதைகுழியில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை புதிதாக 11 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 05

07




## எல்ல பகுதியில் பஸ் விபத்து: 15 பயணிகள் பரிதாபப் பலி!

கொழும்பு, செப். 06

பதுளை மாவட்டம் எல்ல-வெள்ள வாய வீதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

எல்ல - வெள்ளவாய பிரதான வீதியின் 15 ஆவது மைல்கல் அருகில் அமைந்துள்ள மவுண்ட் எவன் சுற்றுலா விடுதிக்கு அருகில் தங்காலை நகரில் இருந்து 38 சுற்றுலாப் பயணிகளுடன்

07



## வடக்கு, கிழக்கில் காணிப் பிரச்னைகளுக்கு தீர்வு காண ஐ.நாவால் விசேட செயல்திட்டம்

யாழ்ப்பாணம், செப். 06

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணி பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் நோக்கிலான விசேட செயல்திட்டமொன்று சர்வதேச புலம்பெயர் அமைப்பின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபையால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலங்களுக்கான எல்லை நிர்ணயம், படையினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் தனியார் காணிகள், அரச கட்டமைப்புகள் உள்ளிட்ட ஏனைய தரப்பினரால் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணி சுவீகரிப்புக்கள்

07

## சந்நிதியானுக்கு இன்று தேர்

- சி. தில்லைநாதன் -

வடமராட்சி, செப். 06

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த் திருவிழா இன்று சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

செல்வசந்நிதி ஆலய பெருந்திருவிழா கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இதேசமயம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. அன்று மௌனத் திருவிழா மாலை 6 மணிக்கு நடைபெறும். இதைத் தொடர்ந்து பெருந் திருவிழா நிறைவடையும். (ஐ)

## யாழ். பல்கலை. வேந்தராக பேராசிரியர் குமாரவடிவேல்



யாழ்ப்பாணம், செப். 06

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வேந்தராக வாழ்நாள் பேராசிரியர் இ. குமாரவடிவேல் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாகச் செயற்படும் வகையில், அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச்

07

## காணாமல்போன 6,700 பேர் குறித்து முதற்கட்ட விசாரணைகள் நிறைவு

கொழும்பு, செப். 06

வலுக்கட்டாயமாக காணாமல் போனோர் வழக்குகள் தொடர்பில் முதற்கட்ட விசாரணைகளில் 6,700 பேரின் வழக்குகளை காணாமல் போனோர் அலுவலகம் நிறைவு செய்துள்ளது.

வலுக்கட்டாயமாக காணாமல்போனோரின் மொத்த எண்ணிக்கை 16,700 என்றும், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் வழக்கறிஞர் மகேஷ் கட்டுலந்த குறிப்பிட்டார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வலுக்கட்டாயமாக காணாமல்போனோர் தொடர்பான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும் 10,000 வலுக்கட்டாயமாக காணாமல் போனோர் குறித்து விசாரிக்க ஒரு சிறப்பு திட்டம் நடந்து வருவதாக கட்டுலந்த மேலும் குறிப்பிட்டார். (அ)

## அநுரவின் கச்சதீவு பயணத்தில் உள்நோக்கம் எதுவுமே இல்லை

### அமைச்சர் ஆனந்த விஜயபால

கொழும்பு, செப். 06

கச்சதீவு விவகாரம் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் எவ்வித இராஜதந்திர பிரச்னையும் இல்லை. ஜனாதிபதியின் கச்சதீவு பயணத்தில் உள்நோக்கம் எதுவும் இருக்கவில்லை என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

அரச தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலின் போது,

"கச்சதீவு பற்றி தமிழக அரசியல் களத்தில் பேசப்படுகின்றது. இந்நிலையில் வடக்கு விஜயத்தின்போது ஜனாதிபதி கச்சதீவுக்கு

07

## விடுதலை புலிகளுக்காக கனடாவில் நிதி திரட்டினாரா ஹரி ஆனந்தசங்கரி

### வெளியாகிய ஆவணத்தால் சர்ச்சை

ஒட்டாவா, செப். 06

விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டும் அலுவலகத்தை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட ஆவணத்தில், கனடாவின் தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியின் தொலைபேசி எண் காணப்பட்டதாக குளோபல் நியூஸ் தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ரோயல் கனடியன் மௌவ்ன்டட் பொலிஸாரின், தேசியப்

07

## 6 மாதங்களில் விபத்துகளால் 1332 பேர் பலி

கொழும்பு, செப். 06

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 31 ஆம் திகதி வரையான முதல் ஆறு மாதங்களில் 1,256 கோர விபத்துகளில் 1,332 பேர்

07

## மன்னாரில் காற்றாலை வேண்டாம் ஒருமித்து எதிர்ப்பு காட்டினர் மக்கள்

மன்னார், செப். 06

மன்னார் தீவுக்குள் காற்றாலை வேண்டாம் என மக்களின் கருத்துக்களை கேட்டறிய மன்னார் வந்த எரிசக்தி அமைச்சர் தலைமையிலான குழுவினரிடம், மன்னார் - சாந்திபுரம், சௌத் பார் மக்கள் ஒருமித்து தமது எதிர்ப்பை தெரிவித்த நிலையில், அங்கிருந்து வெளியேறினர்.

மன்னார் தீவுப் பகுதியில் புதிதாக காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து மக்களின் கருத்துக்களைக் கேட்டறிய எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் மன்னாருக்கு விஜயம் செய்தனர்.

மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் சௌத்பார் பகுதியில் 2 காற்றாலை கோபுரங்களும், தாழ்வுபாட்டில் 2

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு நிற தலைப்பட்டிகளுடன் போரட்டத்தில் இறங்கிய மக்கள்

## மன்னாரில் காற்றாலைக்கு எதிராக வலுக்கும் எதிர்ப்பு

மன்னார், செப். 06

காற்றாலை அமைப்பதற்கு எதிராக மன்னார் மாவட்ட மக்கள் 35ஆவது நாளாகவும் தொடர் போராட்டத்தில் மன்னார் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் பிரதான சுற்றுவட்டப் பகுதியில் ஒன்றுதிரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் காற்றாலை கனியமணல் போன்ற அழிவுத் திட்டங்கள் மன்னார் மாவட்டத்துக்குள் இனியும் வேண்டாம் என்று ஒருமித்த குரலுடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றைய போராட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் மன்னார் ஜோசப் வாஸ் கிராமத்தை சேர்ந்த மக்களும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் சிவப்புநிற தலைப்பட்டிகளை அணிந்து, பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் மக்களின் விருப்பத்துக்கு மாறாக திணிக்கப்படும் குறித்த செயல்திட்டங்களுக்கு எதிராக தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தினர்.

இதேநேரம், நேற்று மன்னார் மாவட்ட மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வவுனியா வேப்பங்குளம் கிராம மக்களும் அவர்களுடன் வேப்பங்குளம் பங்குத் தந்தை, அருட்சகோதரிகளும் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுவிஸ் செல்கிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், செப். 06

2025 இல் இலங்கை சுவிற்சர்லாந்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை - சுவிற்சர்லாந்து 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி சுவிற்சர்லாந்தில் இடம்பெறவுள்ள ஆய்வு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை புதிய அரசியலமைப்பு மாற்றம் நிகழவுள்ள நிலையில் இலங்கை அரசியல்வாதிகள் சுவிஸ் அரசியல் அமைப்பு பற்றிய ஆழமான, நேரடி நுண்ணறிவை பெறவும், அர்த்தமுள்ள பரிமாற்றங்களில் ஈடுபடவும் ஒரு வாய்ப்பை வழங்கும் என சுவிஸ் தூதரக அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் ஐஸ் போதைப்பொருள் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை!

மன்னார், செப். 06

மன்னார் ஐஸ் போதைப் பொருள் குற்றவாளி ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசத்தில் 2023 ஆண்டு காலப்பகுதியில் 11 கிராம் தூய நிறையுடைய ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கே இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி மிஹால் தலைமையில் குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட நிலையில் குற்றத்தின் பாரதூரத் தன்மையை கருத்திற்கு கொண்டு சந்தேகநபருக்கு எதிராக குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரி தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி யு. ஆர். டி. சில்வாவுடன் சட்டத்தரணி ஹூனைஸ் பாரூக் ஆஜராகி இருந்தார்.

வழக்கு தொடுனர் தரப்பில் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் ஆஜராகி இருந்தார்.

வழக்கு தொடுநர் தரப்பில் வழக்கு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவிழா கால அருளுரை!

யாழ்ப்பாணம், செப். 06

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த திருவிழாவின் 14ஆம் நாள் திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், "மனிதனுடன் ஆன்மீகமும் உளவியலும்" என்ற தலைப்பில் ஆன்மீக அருளுரை நிகழ்த்தப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர சாதனை தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதேவேளை 13ஆம் திருவிழாவான நேற்று "சமூக ஒழுங்கு" என்ற பெரும்பொருளில் ஆன்மீக அருளுரையினை ஆசிரியர் ச. வாகீசன் நிகழ்த்தினார். (2,5)

# பொதுக்கூட்டமும் சிறப்புரையும்

யாழ்ப்பாணம், செப். 06

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளும் மதுரையைச் சேர்ந்த பேராசிரியர க.பழனித்துரை காந்தியக் கொள்கை எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

# ஏ-9 வீதியில் பயணித்து கார் திடீரென்று தீப்பற்றி எரிந்தது

கிளிநொச்சி, செப். 06

கிளிநொச்சியில் ஏ-9 வீதியால் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்று திடீரென்று தீப்பற்றி எரிந்தது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகாமையில் பயணித்துக் கொண்டிருந்த காரே இவ்வாறு திடீரென தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. காரை விட்டு சாரதி இறங்கியதால் அவர் தீ விபத்தில் இருந்து தப்பினார்.

பின்னர் அங்கிருந்தவர்கள் தீயணைப்புப் பிரிவுக்கு அழைப்பு மேற்கொண்டபோதும் அங்கு ஊழியர்கள் இல்லை என தெரிவிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. இது குறித்து கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையிலும் பொலிஸார், தீயை அணைத்த பின்னரே அந்த பகுதிக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான விபத்துகள் அல்லது சம்பவங்கள் இடம்பெறும்போது பொலிஸார் மற்றும் தீயணைப்பு பிரிவினர் உரிய நேரத்துக்கு சம்பவ இடத்திற்கு சென்று தமது கடமையை சரிவர ஆற்ற வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-05)

# கடலட்டைப் பண்ணை சங்கங்களின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 06

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருக்கும், கடலட்டைப் பண்ணை சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் குருநகரில் நடைபெற்ற இச்சந்திப்பில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மணியந்தோட்டம், குருநகர் ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கடற்றொழில் பண்ணையாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் அமைச்சரிடம் எடுத்துரைத்தனர். அத்துடன், தமக்காக அமைச்சர் முன்னெடுத் துள்ள திட்டங்களுக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர்.

அதேபோல கடலட்டைப் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் இதர பிரச்னைகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் பதிலளித்தார்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றியும் அமைச்சர் விளக்கமளித்தார். (அ)

# தற்காப்புகலையில் தேசியத்தில் வரலாற்று தடம்பதித்த விநாயகபுரம் அ.த.க. பாடசாலை

முல்லைத்தீவு, செப். 06

துணுக்காய் வலயத்திற்கு உட்பட்ட முல்லைத்தீவு விநாயகபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 2025ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட மல்யுத்தப்போட்டி கம்பகா உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் 56 மாணவர்களினை இடைநிலைப்பிரிவில் கொண்டதுடன் முல்லைத்தீவு விநாயகபுரம் அ. த. க. பாடசாலை இரண்டு தேசிய மட்ட பதக்கங்களை தனதாக்கியது.

அந்த பாடசாலையை சேர்ந்த செ. யதுர் சன் மற்றும் க.லோஜினி என்பவர்கள் வெண்கலப்பதக்கத்தை பெற்றுக் கொண் டுள்ளனர். மாகாண மட்ட



போட்டியில் 30 பதகங்களை தனதாக்கிய பாடசாலை கடந்த வருடம் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-05)




ஈஸ்டர் தின தாக்குதல்

ஆழ் நிலை அரசும் மர்மங்களும்

உரையும் உரையாடலும்

• தலைமை - திருநாவுக்கரசு (சுகு) சிறீதரன்

• பிரதான உரை - நூலாசிரியர் - சுனந்த தேசப்பிரிய

(பிரதான உரை தமிழில் உரைபெயர்க்கப்படும்)

• மொழிபெயர்ப்பாளன் உரை - செல்லையா மனோரஞ்சன்

• நன்றியுரை - சாமுவேல் தங்கராசா

2025 செப். 06 சனி பி.ப. 3.30 மணி

தந்தை செல்வா அரங்கு, யாழ்ப்பாணம்

• நிகழ்ச்சி ஒழுங்கு

PFD - ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம்

அறிமுக விலையில் நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.09.2025 சனிக்கிழமை

விசுவாவசு வருடம், ஆவணி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

# அநுரவின் வாக்குறுதி?

செம்மணி விவகாரத்தில் சுயாதீனமான விசாரணை இடம்பெறும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்திருக்கிறார். இலங்கையில் இடம்பெற்றவை என்று கருதப்படும் எந்தவோர் அத்துமீறல்களுக்கும் இதுவரையில் சுயாதீன விசாரணை நடைபெற்றதில்லை. அவ்வாறான தொரு விசாரணையை முன்னெடுக்கக்கூடிய அரசியல் துணிவுடன் எந்தவோர் அரசாங்கமும் இருந்ததுமில்லை. இதற்கான அடிப்படையான காரணம் என்ன? முதுகெலும்புள்ள ஆட்சியாளர்களை இலங்கைத் தீவு இதுவரையில் சந்தித்ததில்லை.

தவறுகளைத் திருத்துவதை விடவும் தவறுகளை நியாயப்படுத்தி தவறுகள் புரிந்தவர்களை பாதுகாப்பதையே இலங்கையின் ஆட்சியாளர்கள் வாழையடிவாழையாக பின்பற்றி வந்திருக்கின்றனர். இந்த வங்குரோத்து அரசியல் மரபுக்கு மாறாக அநுர குமாரவால் நடந்துகொள்ள முடியுமா என்பதுதான் கேள்வி. ஒருவேளை உண்மையிலேயே அநுர குமாரவுக்கு அவ்வாறான எதிர்பார்ப்பு இருந்தாலும்கூட இலங்கையின் பலவீனமான அரசியல் சூழலுக்குள் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்ற ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியால் எந்தளவுக்கு தங்களின் வாக்குறுதிக்கு நேர்மையாக இருக்க முடியும்?

செம்மணி புதிய விடயமல்ல - முன்னைய ஆட்சியாளர்களாலும் பேசப்பட்டு பின்னர் கண்டுகொள்ளாமல் விடப்பட்ட விடயம்தான். புதைகுழிகளால்தான் இப்போது மீண்டும் செம்மணி பற்றிப் பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை புதிய புதைகுழிகள் அடையாளம் காணப்படாமல் இருந்திருந்தால் - செம்மணி பற்றி அநுரகுமார பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. நீதியை பாதுகாப்பதும் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பை இலங்கையின் ஆட்சியாளர்கள் ஆகக்குறைந்த மனிதநேயத்தின் அடிப்படையில்கூட அணுகியதில்லை.

இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றவை என்று நம்பப்படும் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் இதுவரையில் பொறுப்புக்கூற வேண்டும் - அதற்கான கடப்பாடு தங்களுக்கு உண்டு என்பதை கடந்த பதினாறு வருடங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் எவருமே நிரூபிக்கவில்லை. இதில் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும் அதாவது. ஆட்சியிலிருப்பவர்கள் தவறிழைக்கின்றபோது - தங்களின் பொறுப்புகளை தட்டிக்கழிக்கின்றபோது அதனை சுட்டிக்காட்டி - அரசாங்கததின்மீது தார்மீக அழுத்தங்களை பிரயோகிக்கவேண்டிய பொறுப்பு எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளுக்கு உண்டு.

ஆனால், இலங்கைத் தீவில் அது நடக்கிறதா என்றால் இல்லை. ஆட்சியாளர்கள்மீது பல்வேறு விடயங்களில் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் எதிரணியினரோ இறுதி யுத்தம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டும் என்பதிலோ அதற்கான, கடப்பாட்டிலிருந்து அரசாங்கம் விலகியோட முடியாது என்பதை சுட்டிக்காட்டுவதிலோ ஒருபோதும் முன்னரங்க அரசியல் தரப்புகளாக இருந்ததில்லை.

ஆட்சியில் இருப்பவர்களை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளோ இராணுவத்தின்மீதான குற்றச்சாட்டுகள் என்று வருகிறபோது அந்தக் குற்றச்சாட்டுக்களை மறுப்பவர்களாவும் - தவறுகளை நியாயப்படுத்துபவர்களாகவும் இருக்கின்றனர். ஜே. வி. பி. முக்கியமாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் இந்த வரிசையில் இருந்த ஒருவர்தான். கடந்தகாலத்தில் இருந்தவர்கள் பொறுப்புக் கூறுவதைத் தட்டிக்கழித்தபோது அவ்வாறாக ஆட்சியாளர்களுக்கு எதிராகத் திருப்பவில்லை. குறிப்பாக, மகிந்த ராஜபக்ஷ காலத்தில் இராணுவத்தின் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தபோது மேற்குலகத்தையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையும் விமர்சித்தவர்கள்தான் - எதிர்த்தவர்கள்தான். இவ்வாறானதொரு பினபுலத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் அநுர குமார திஸநாயக்கவும் சுயாதீனமான விசாரணை தொடர்பில் பேசுவதை நோக்க வேண்டியிருக்கிறது.

## முல்லைத்தீவு விபத்தில் நால்வர் காயம்

முல்லைத்தீவு, செப். 06

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன் குளம் பகுதியில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்துள்ளனர். நேற்று அதிகாலை ஏ-9 வீதியின் பனிக்கன் குளம் பகுதியில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

டிப்பர் வாகனத்திற்கு பின்னால் வந்த பார ஊர்தி டிப்பரில் மோதி விபத்து ஏற்பட்ட அதேநேரம் பின்னால் வந்த ஹைஏஸ் வாகனம் பார ஊர்தியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர். விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## ஹெல்மட் பாதுகாப்புக்கு 50 ரூபாய்

யாழ்ப்பாணம், செப். 06

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இடம்பெற்று வருகிறது.

இன்று காலை தேர்த்திருவிழாவும், நாளை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

தொண்டைமானாறு தண்ணீர் தாங்கி அருகே உள்ள மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் தலைக்கவசம் (ஹெல்மட்) ஒன்றை பாதுகாப்பதற்கு 50 ரூபாய் அறவிடப்படுகிறது.

கட்டணம் அதிகம் தொடர்பில் பொதுமக்கள் மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலைய ஊழியரிடம் வினவியபோது, அவர் வல்வெட்டித்துறை நகர சபையினர் தான் 50 ரூபாய் அறவிட சொன்னதாக குறிப்பிட்டு பொதுமக்களிடம் முரண்பட்டிருந்தார்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை நகரசபை உப தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர், குறித்த பாதுகாப்பு நிலையம் தொடர்பில் ஏற்கனவே ஐந்தாறு முறைப்பாடுகள் கிடைத்து தங்களது வருமான வரி உத்தியோகத்தர் தலையிட்டு ரிக்கெட்டுக்களை பறிமுதல் செய்து எச்சரித்ததாகவும் குறிப்பிட்டார்.

வாகனப் பாதுகாப்பு நிலையத்துக்கு நகர சபை சார்பில் ஒரு மோட்டார் சைக்கிளுக்கு 40 ரூபாயும், ஒரு ஹெல்மட்டுக்கு 20 ரூபாய் அறவிடுமாறு உத்தரவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

இப்போது கிடைத்துள்ள முறைப்பாடு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்ட அவர், குறிக்கப்பட்ட தொகையை தாண்டி பொதுமக்களிடம் கட்டணங்கள் அறவிட்டால் ஆலயத்தின் முன்னுள்ள வல்வெட்டித்துறை நகரசபையின் உற்சவகாலப் பணிமனையில் முறையிடுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், இவ்வாறு மோசடி இடம்பெற்றமை குறித்து கேள்வி கேட்ட ஊடகவியலாளரை குறித்த பாதுகாப்பு நிலையத்தில் கடமையில் இருந்தவர் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## "தேர்தல்கால வாக்குறுதிகள் படிப்படியாக நிறைவேற்றம்"

கிளிநொச்சி, செப். 06

தேர்தல் காலத்தில் வழங்கிய உறுதிமொழிகளை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் படிப்படியாக நிறை வேற்றி வருவதாகவும் மக்களின் ஆதரவை பொறுக்க முடியாத, தேர்தலில் தோல்வியுற்ற அரசியல்வாதிகள் ஒன்றிணைகின்றனர் எனவும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

## நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் நடத்தப்பட்ட இந்திய கலைஞரின் வள்ளிக் கும்மிநடனம்

யாழ்ப்பாணம், செப். 06

தமிழகத்தில் இருந்து வருகை தந்த கலைஞர்களின் வள்ளிக் கும்மி நடனமானது நேற்று முன்தினம் நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் ஆற்றப்பட்டது.


நேற்று முன்தினம் தமிழகத்திலிருந்து காங்கேசன்துறை ஊடாக 150இற்கும் அதிகமானோர் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். இவ்வாறு வருகை தந்தவர்களில் 65 கலைஞர்கள் இந்த வள்ளி கும்மி நடனத்தை ஆற்றினார்கள்.

இரு நாடுகளுக்கு இடையிலான இன நல்லுறவை வலுப்படுத்தும் நோக்கிலும் தென்னிந்தியாவின் பாரம்பரிய கலையை ஈழத்து மக்களிடமும் கொண்டு சென்று சேர்க்கும் முகமாகவும் இந்த பள்ளிக்கு நடனம் ஆற்றப்பட்டது.

சிவகுரு ஆதீனத்தினர், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், பல நூற்றுக்கணக்கான ரசிகர்கள் இதில் கலந்து கொண்டனர். (அ-05)



## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 06 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 21
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களை கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

**கடகம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் கை ஓங்கும்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புது வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். எதிர்பாராத உதவி கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். மேலதிகாரி வியப்பார். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வுகளை பாராட்டுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

# 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மருத்துவ பரிசோதனை அவசியம்

## யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

*யாழ்ப்பாணம், செப். 06*

35 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆண்டுக்கு இரு தடவைகள் மருத்துவப் பரிசோதனை செய்வது அவசியம் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொற்றா நோயினைக் கட்டுப்படுத்தல் தொடர்பான மாவட்ட செயலணி ஸ்தாபித்தல் கூட்டமானது யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது மருத்துவர் கேதீஸ்வரன் மேலும் கூறுகையில்,

"பாடசாலைகளிலும் அலுவலகங்களிலும் ஆரோக்கியமான மேம்பாட்டு அறை இருத்தல் வேண்டும்.

35 வயதைக் கடந்தவர்கள் ஆண்டுக்கு இரண்டு தடவைகள் மருத்துவ பரிசோதனை செய்வது அவசியம். பொதுமக்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அல்லது சுகாதார நிலையங்களில் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு தமக்குரிய தனிப்பட்ட மருந்துவப் புத்தகத்தை பேண முடியும்.

அலுவலகங்கள், நிறுவனங்கள் கேட்கும் பட்சத்தில் இலவச மருத்துவ பரிசோதனைகள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும்.

அலுவலகங்களில் புகைத்தல் தடைசெய்யப்பட்ட பிரதேசம் என காட்சிப்படுத்தப்பட்ட பலகை இருத்தல் வேண்டும் என்பதுடன் அலுவலகங்களுக்கு வருபவர்கள் வெற்றிலையுடன் (வெற்றிலையை மென்றுகொண்டு) வருவதையும் அனுமதிக்கக் கூடாது.

வீதி விபத்துக்களைத் தடுத்தல் வேண்டும் என்பதுடன், பாதுகாப்பற்ற கிணறுகளால் ஏற்படும் ஆபத்துக்கள் மற்றும் நீரில் மூழ்கி இறப்பது அதிகரித்துள்ளதால் அது தொடர்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம். அத்தோடு, ஆபத்தானது என்று அடையாளப்படுத்தல்கள் அல்லது தடுப்புகள் ஏற்படுத்துவது அவசியம்.

கடந்த ஆண்டில் விசர்நாய் கடியால் ஒருவருக்கு இறப்பு ஏற்பட்டது. பொதுமக்களுக்கு இது தொடர்பிலான விழிப்புணர்வு அவசியம்"- என்றார். (எ)

# "யாழில் மீள்குடியேற்ற செயல்பாடுகளுக்கு ஹலோ ட்ரஸ்ட் பங்களிப்பு அளப்பரியது"

*யாழ்ப்பாணம், செப். 06*

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்ற செயல்பாடுகளுக்கு ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வை சிப்பா (**Centre for Poverty Analysis**) நிறுவனம் மேற்கொண்டுவருவதற்கு அமைவாக அதன் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் மொஹட் முனாஸ், அரசாங்க அதிபர் பிரதீபனை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த அரசாங்க அதிபர் கூறுகையில், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் 2002 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட காணிகளில் கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகள் இல்லை என்ற உறுதிப்படுத்தல்களை வழங்கிய பின்னரே பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணம் மாவட்ட மீள்குடியேற்ற செயல்பாடுகளுக்கு ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் பங்களிப்புகள் காத்திரமாக அமைந்திருந்தன. அதன் பின்னரான செயல்பாடுகளையும் விபரமாக எடுத்துக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந. தயாபரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ)

# வீட்டுத்திட்டங்களுக்கான மிகுதி நிதி அடுத்த ஆண்டு முதல் வழங்கப்படும்

## யாழில் பிரதியமைச்சர் சரத் உறுதி

*யாழ்ப்பாணம், செப். 06*

கடந்த ஆட்சிக் காலத்தில் தேர்தலுக்காக சிறு தொகை நிதி வழங்கப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடுகளுக்கான மிகுதி நிதி அடுத்த ஆண்டு முதல் எமது அரசாங்கத்தால் வழங்கப்படும் என்று நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் ரி. பி. சரத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் மீளாய்வுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பிரதி அமைச்சர் சரத் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் சரத் மேலும் கூறுகையில், "மீள்குடியேற்ற செயல்பாடுகளுக்காக எமது அமைச்சின் ஊடாக யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இவ்வாண்டு 1259 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீள்குடியேற்ற செயல்பாடுகளின் முன்னேற்றங்களை நேரில் ஆராய வந்துள்ளோம். எமது அரசாங்கம் நாட்டை பொறுப்பேற்கும் போது விவசாயம், கைத்தொழில், அபிவிருத்தி போன்றனவற்றில் வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டது. கிளிநொச்சியிலுள்ள கிராமங்களுக்குச் சென்ற போது அடிப்படைத் தேவைகள், போக்குவரத்து வசதிகள், அபிவிருத்திகள் வீழ்ச்சி நிலையிலேயே உள்ளதை அவதானிக்க முடிந்தது. மேலும், கடந்த ஆட்சி காலத்தில் தேர்தலுக்காக சிறு தொகை நிதி வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 3847 வீடுகளுக்கான மிகுதி நிதி அமைச்சரை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் வழங்கப்படும்"- என்றார். (எ)

# டெங்கு நோய் கட்டுப்பாட்டு கூட்டம்

*யாழ்ப்பாணம், செப். 06*

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, முன்னெச்சரிக்கையாக டெங்கு நோய் வராமல் தடுப்பதற்குரிய வழிவகைகள் ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. இம் மாதம் - செப்ரெம்பர் 08 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிக்கிடையில் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச டெங்கு கட்டுப்பாட்டு கூட்டத்தையும் கிராம உத்தியோகத்தர் தலைமையில் கிராம மட்ட டெங்கு நோய் கட்டுப்பாட்டு கூட்டத்தையும் நடத்துதல்.

2. டெங்கு விழிப்புணர்வு வாரத்தை இம் மாதம் - செப்ரெம்பர் 14 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடத்துவது எனவும் அந்தவகையில் 14 ஆம் திகதி வணக்கஸ்தலங்களிலும் 15 ஆம் திகதி அரசாங்க அலுவலகங்களிலும் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் பாடசாலைகளிலும் சம்பந்தப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஒருங்கிணைப்பில் விழிப்புணர்வு செயல்பாடுகளை மேற்கொள்ளுதல் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. விசேட நுளம்பு கட்டுப்பாட்டு தினங்களான இம் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிகளில் - சுத்திகரிப்பு சிரமதான வேலைகளை வீடுகள், பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் மேற்கொள்ளுதல் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இலங்கையில் மலேரியா நோய் கட்டுப்பாட்டில் உள்ளது, எனினும் தென்னாபிரிக்க நாடுகளிலிருந்து வருபவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம் எனவும் அறிவுறுத்தப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு அரசில் முன்னுரிமை வழங்குங்கள்!

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 06
"கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தமை மகிழ்ச்சிக்கு உரியது. இந்த ஆணையை பாதுகாக்க வேண்டும். தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு அரசாங்கத்தில் முன்னுரிமை வழங்கவேண்டும்" என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வடக்கு, கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் அந்த மக்களின் அடிப்படை பிரச்னைகளை முன்னிலைப்படுத்தியே அரசியல் செய்தார்கள். செல்வநாயகம், பொன்னம்பலம் போன்றவர்கள் வாராந்த அரசியலில் ஈடுபட்டார்கள். வடக்குக்கு சென்று ஒன்றை கூறிவிட்டு கொழும்புக்கு வந்து பிறிதொன்றை குறிப்பிட்டார்கள்.

30 வருடகால யுத்தம் நாட்டில் இழப்புகளையும் வேதனைகளையும் மாத்திரமே மிகுதியாக்கின. வடக்கு, கிழக்கு மக்கள் இன்றும் அதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, இந் நிலைமை மாற்றம் பெற வேண்டும்.

வடக்கு, கிழக்கு மக்கள் கடந்த பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தமை மகிழ்ச்சிக்குரியது. இந்த ஆணையை பாதுகாக்க வேண்டும். வடக்கு, கிழக்குக்கான அபிவிருத்திகளை அரசாங்கம் விரிவுபடுத்த வேண்டும். தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# சிறுவர்கள்மீதான துன்புறுத்தல்கள் 7 மாதங்களில் 5,461 முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 06
இந்த ஆண்டில் முதல் ஏழு மாதங்களில் சிறுவர்கள் துன்புறுத்தப்பட்டமை தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அத்துடன், சிறுமிகள் கர்ப்பம் தரித்தல் தொடர்பில் 44 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி 01 முதல் ஜூலை 31 வரை சிறுவர்கள் தொடர்பாக 5 ஆயிரத்து 461 முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளன.

இவற்றில், 4 ஆயிரத்து 501 முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு சட்டம் தொடர்புடையவை. 960 முறைப்பாடுகள் சட்டத்துடன் தொடர்புபடாதவை.

இந்த 7 மாதங்களில் சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. 141 முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகங்கள், 330 முறைப்பாடுகள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களாகும். அத்துடன், பிற துன்புறுத்தல்கள் தொடர்பாக ஆயிரத்து 126 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சிறுவர்கள் யாசகம் பெறுவது தொடர்பில் 125 முறைப்பாடுகளும் இணைய மிரட்டல் தொடர்பாக 81 முறைப்பாடுகளும் தற்கொலை தொடர்பாக 10 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# போதைப்பொருட்களுடன் 3,027 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, செப். 06
பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் நாடளாவிய ரீதியில் கடந்த 5 நாட்கள் 3 ஆயிரத்து 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 2 ஆயிரத்து 998 பேர் ஹெரோயின், ஐஸ், குஷ், கஞ்சா, போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத சிகரெட்களை வைத்திருந்த குற்றத்தில் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், 48 ஆயிரத்து 925 கஞ்சா செடிகளுடன் 29 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# ரயில் மோதி பெண் பலி!

கொழும்பு, செப். 06
ரயில் மோதியதில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

காலி - பெலியத்த ரயில் பாதையில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், இறந்தவருக்கு வயது சுமார் 75 இருக்கலாம் என்றும் அவர் அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் காலி தேசிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீட்டுவாசலில் நின்றிருந்த பெண் குத்திப் படுகொலை

கொழும்பு, செப். 06
வீட்டின் வாசலில் நின்று கைபேசியில் பேசிக் கொண்டிருந்த பெண் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

அநுராதபுரம் - இராஜாங்கனை நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், 49 வயதான பெண் ஒருவரே கொலையானார். குறித்த பெண் கணவரை பிரிந்து பெற்றோருடன் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், வீட்டு வாசலில் கைபேசியில் பேசியவாறு இருந்துள்ளார். அந்தச்சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரை கூரிய ஆயுதத்தால் குத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

இதில், படுகாயமடைந்த பெண் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் இராஜாங்கனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உண்மையான பிரச்னைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு அவசியம்

## எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 06
நாட்டிலுள்ள உண்மையான பிரச்னைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் கணித்துள்ளதன் பிரகாரம், இந்தக் காலப் பகுதியில் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்த மட்டத்திலேயே அமையும் என வெளிக்கொணரப்பட்டுள்ளது. எனவே, அனைவரும் கைகோத்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வேரஹெர சித்தார்த்தராம புராண ராஜமஹா விகாரையில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது நமக்கு இன்னும் பல சவால்கள் காணப்படுகின்றன. இந்த விடயங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒரு நாடாக நாம் 2028 முதல், ஆண்டுதோறும் 550 கோடி டொலர் வெளிநாட்டுக் கடனைச் செலுத்த வேண்டியுள்ளது. இந்த கடனை செலுத்துவதற்கு, 2025, 2026 மற்றும் 2027 ஆகிய மூன்று வருடங்களிலும் குறைந்தபட்சம் 5 சதவீத பொருளாதார வளர்ச்சி வீதத்தை பேணவேண்டும். உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் கணித்துள்ளதன் பிரகாரம், இந்தக் காலப்பகுதியில் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்த மட்டத்திலேயே அமையும் எனக் கூறப்படுகிறது. எனவே, அனைவரும் கைகோத்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

இந்தப் பயணத்தில், இன, மத, சாதி, வர்க்கம் மற்றும் கட்சி பேதங்களை கடந்து சகல மக்களும் எந்தப் பாகுபாடும் இல்லாமல் இணையவேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# சிறைச்சாலையில் சோதனை; 27 கைபேசிகள் கைப்பற்றல்!

கொழும்பு, செப். 06
கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட திடீர் சோதனையில் ஸ்மார்ட் கடிகாரங்கள், கைபேசிகள் மற்றும் பல்வேறு போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று சிறைச்சாலை உள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்டுபிடிக்கப்பட்டவற்றில் 27 கைபேசிகளில் 07 ஸ்மார்ட் கைபேசிகளும், ஐஸ், கஞ்சா போதைப்பொருட்களும் அடங்குகின்றன.

கைபேசிகளை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இலங்கை - இத்தாலி இடையே அரசியல் ஆலோசனை கூட்டம்



கொழும்பு, செப். 06
இலங்கை - இத்தாலி இடையிலான முதல்சுற்று அரசியல் ஆலோசனை கூட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டுக்கு வருகை தந்த இத்தாலியின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மரியா திரிபோடிக்கும் வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவுக்கும் இடையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அரசியல் ஆலோசனை பொறிமுறையை நிறுவுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் இதன்போது கைச்சாத்திடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# வீடு கொள்வனவுக்கு எம்.பிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளும் நீக்கம்!

கொழும்பு, செப். 06
பாராளுமன்ற உறுப்பினர்கள் "வியத்புர" வீட்டுத் திட்டத்தில் வீடுகளை கொள்வனவு செய்யும்போது வழங்கப்பட்ட சலுகைகளை நீக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 2022 மே 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற குழப்பகரமான சூழ்நிலையால் வீடுகளை இழந்த அப்போதிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்ட வியத்புர வீட்டுத் தொகுதியில் 101 வீடுகளை ஒரு வருட வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு 2022 ஜூலை 4ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

பின்னர், இந்த வீடுகளை சலுகை முறையில் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இதன்படி, ஒரு கோடியே 55 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டை ஒரு கோடியே 33 இலட்சம் ரூபாய்க்கும் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் வீட்டை ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாய்க்கும் வழங்க முடிவு செய்யப்பட்டது. அத்துடன், விற்பனை விலையில் 25 சதவீதத்தை ஆரம்பக் கட்டணமாக அறவிடவும் எஞ்சிய தொகையை 15 வருடங்களில் 10 சதவீத ஆண்டு வட்டி வீதத்தின் கீழ் அவர்களிடமிருந்து அறவிடவும் 2024 ஜூலை 15ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் 29 முன்னாள் எம். பிக்கள் கடந்த 2024.12.31ஆம் நாளன்று 25 சதவீதத்தை வைப்பில் இட்டனர்.


எனினும், இந்தச் சலுகையால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 9 கோடியே 21 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதுடன் செலவை ஈடுசெய்வதற்கு இயலாமல் போயுள்ளது.

இதனால், இந்த சலுகையை இரத்துச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பணத்தை செலுத்திய முன்னாள் எம். பிக்கள் உடன்பட்டால் அதன் பெறுமதி விலையிலேயே வீடுகளை வழங்க நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் புதைகுழிகளுக்கு நீதி கோரி கிழக்கில் கையெழுத்துப் போராட்டம்



மட்டக்களப்பு, செப். 06

செம்மணி, அரியாலை - சித்துப்பாத்தி உட்பட இலங்கையின் வடக்கு - கிழக்கு மண்ணில் உள்ள மனிதப் புதைகுழிகள் மற்றும் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டக் ளப்பு காந்தி பூங்காவில் தமிழ்த் தேசிய கட்சியினர் ஒன்றிணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறீநேசன், இளையதம்பி சிறிநாத், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், பாக்கியசோதி அரியநேத்திரன், முருகேசு சந்திரகுமார், சுரேஸ் பிரேமச்சந்திரன், மட்டு. மாநகர சபை முன்னாள் முதல்வர் சரவணபவான் உட்பட தமிழ்த் தேசிய கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (எ)

# பார்வையிழந்த மாணவி பரீட்சையில் சித்தி



மட்டக்களப்பு, செப். 06

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் பரீட்சைக்கு தோற்றிய பார்வை இழந்த மாணவியொருவர் சித்தியடைந்துள்ளார்.

மட்டக்களப்பு, கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரியில் ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கும் ரவிச்சந்திரன் ஜெனிபர் என்ற மாணவியே இவ்வாறு பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

மட்டக்களப்பு தரிசனம் விழிப் புலனற்றோர் பாடசாலையில் தங்கி கல்வி கற்று வரும் இவர் 88 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக விவேகானந்தா மகளிர் கல்லூரி பிரதி அதிபர் த. சிவக்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சராசரி மாணவர்களுக்கான வெட்டுப் புள்ளி 132 ஆக இருந்தபோதிலும் விஷேட தேவையுடைய மாணவர்களுக்கான வெட்டுப் புள்ளி எண்பதாகும். மாணவி ஜெனிபர் 88 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். (எ)

# மூதூரில் மோ. சைக்கிள் - டிப்பர் மோதி விபத்து; ஒருவர் படுகாயம்

மூதூர், செப். 06

திருகோணமலை மாவட்டம், மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியபாலம் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் தவில் வாத்திய கலைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த வாத்திய கலைஞர் மூதூர் தள மருத்துவ மனையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் - டிப்பர் வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதோடு மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே படுகாயமடைந்துள்ளார்.

இவர் திருகோணமலையைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலையிலிருந்து மல்லிகைத்தீவில் நடைபெறவுள்ள திருமண வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# தென்கிழக்கு பல்கலையில் தந்தை செல்வா நினைவுதினம்

கல்முனை, செப். 06

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் "தந்தை செல்வா" என மதிப்புடன் அழைக்கப்படும் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 127ஆம் ஆண்டு பிறந்த நாளையும் 41ஆம் ஆண்டு நினைவு நாளையும் முன்னிட்டு தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட அரசியல் விஞ்ஞானத் துறை மற்றும் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை இணைந்து நடத்திய சிறப்பு நினைவு தின சொற்பொழிவு மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு கடந்த புதன்கிழமை பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் தொடக்கத்தில், செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் பிரதான அறங்காவலர் எஸ். சி. சி. இளங்கோவன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

தந்தை செல்வாவின் வாழ்க்கைத் தத்துவங்களையும் கொள்கைகளையும் இளைய தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கத்துடன் இவ்வாறு நிகழ்வு நடத்துவதில் பெருமை கொள்வதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் எம். அப்துல்ஜப்பார் அறிமுக உரையை வழங்கி, மாணவர்களுக்கு தந்தை செல்வாவின் அரசியல் பாரம்பரியத்தை விளக்கி கூறினார்.

பிரதான உரையை துணை வேந்தர் எஸ். எம். ஜூனைதீன் நிகழ்த்தினார். அவர் தனது உரையில், தந்தை செல்வா - "ஈழத்தின் காந்தி" என அழைக்கப்படுவதற்குரிய அஹிம்சை, நீதி மற்றும் ஜனநாயகத்துக்கான அர்ப்பணிப்பை வலியுறுத்தினார்.

அரசியல் என்பது அதிகாரம் பெறுவதற்கான போராட்டம் அல்ல அது வன்முறையிலும் பழிவாங்கலிலும் அமையக் கூடாது. மாறாக, உரையாடல், கொள்கை, சமாதானம், நீதி ஆகியனவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் சமூக ஆராய்ச்சி மற்றும் கல்வி வாயிலாக ஒற்றுமை மற்றும் சமாதானத்தை முன்னிறுத்தும் மையமாக செயல்பட வேண்டும்- என்றார். (எ-01)

# 9 வயது சிறுமி துஷ்பிரயோகம்; பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

மட்டக்களப்பு, செப். 06

9 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தல பொலிஸ் பிரிவின் எகொடவத்த ஒக்கம்பிட்டிய வீதியைச் சேர்ந்த சிறுமியே இவ்வாறு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் இணைக்கப்பட்ட ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார்.

பாடசாலை சிறுமிகள் மீதான பாலியல் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் குறித்த சிறுமி கல்வி கற்கும் பாடசாலையில் நடைபெற்றது.

இதன்பின்னர் அந்த சிறுமி தனது தாயாரிடம் தனக்கு நேர்ந்ததை தெரிவித்தார். இது தொடர்பில் தாயார், புத்தல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

2024 நவம்பர் மாதம் ஒரு நாள் பாடசாலை முடிந்ததும் பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற சிறுமி, தனது நண்பியின் வீட்டுக்குச் சென்றிருந்தார்.

சந்தேகத்துக்குரிய பொலிஸ் கான்ஸ்டபிள், அவ்வழியிலேயே தானும் செல்வதாக கூறி, வீட்டில் விட்டுச் செல்வதாக அந்தச் சிறுமியை மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்று ஓர் அறையில் வைத்து துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இந்த நிலையில் மகளிர் பொலிஸ் பிரிவு அதிகாரிகளால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர், வெல்லவாய நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர், வெல்லவாய மாவட்ட நீதிபதி மற்றும் நீதவான் எல். மஞ்சுள ரத்நாயக்க அவரை 10 இலட்சம் ரூபாய் ரொக்க பிணையில் விடுவித்து, சாட்சிகளை அச்சுறுத்த வேண்டாம் என்று எச்சரித்தார். வழக்கு 10ஆவது மாதம் 29 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது. (எ)

# கிழக்கு பல்கலையில் பகிடிவதை 16 மாணவர்களுக்கும் பிணை

மட்டக்களப்பு, செப். 06

கிழக்கு பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களை பகிடிவதை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதான 16 மாணவர்களுக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களை அதே பீடத்திலுள்ள 3 ஆம் ஆண்டு மாணவர்கள் கடந்த 2023 ஆம் ஆண்டு பகிடிவதை செய்துள்ளனர்.

அதில், பாதிக்கப்பட்ட மாணவன் ஒருவர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து 7 மாணவிகள் உட்பட 16 பேரை புதன்கிழமை மாலை குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், 16 மாணவர்களையும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று அங்கு வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களைப் பெற்றனர்.

இந்த நிலையில், 7 மாணவிகள் உட்பட 16 பேரையும் நேற்று முன்தினம் ஏறாவூர் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது தலா ஓர் இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவித்து எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# ஹற்றன்-ஹைலன்ட்ஸ் மத்திய கல்லூரியில் 53 மாணவர்கள் சித்தி

ஹற்றன், செப். 06

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 53 மாணவர்களை சித்தி பெற வைத்து ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட ஹைலன்ட்ஸ் மத்திய கல்லூரி மற்றுமொரு சாதனையை படைத்துள்ளதாக அந்தக் கல்லூரியின் அதிபர் எஸ். ராஜன் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹைலன்ட்ஸ் மத்திய கல்லூரியிலிருந்து 101 மாணவர்கள் இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். அதில் 53 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். 70 புள்ளிகளுக்கு மேல் 99 சதவீத மாணவர்கள் பெற்றுள்ளனர். இது ஹைலன்ட்ஸ் கல்லூரிக்கு கிடைத்த மற்றுமொரு வெற்றி, இதற்காக உழைத்த ஆரம்பப் பிரிவு பிரதி அதிபர் சுகுமார் உட்பட ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள் உட்பட கல்விப் புலம் சார்ந்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார். (எ)

# நோர்வூட் பாடசாலைக்கென நிலையான கட்டடம் இல்லை

நுவரெலியா, செப். 06

நோர்வூட் ஆரம்பப்பிரிவு பாடசாலையில் கடந்த ஐந்து வருடங்களாக புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தாலும் மாணவர்களுக்கென நிலையான கட்டடம் ஒன்று இல்லையென பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலைக்கான காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் தற்காலிக மண்டபம் ஒன்றில் இயங்கி வருவதோடு மேலதிகமாக தொண்டமான் விளையாட்டு மைதானத்தில் நான்கு வகுப்பறைகள் இயங்கி வருகின்றன. [illegible] வித்தியாலயத்தில் சுமார் 400 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இதேவேளை, இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் 24 மாணவர்கள் சித்தியடைந்து நோர்வூட் ஆரம்பப்பிரிவு பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழக்கு...

என்பன உள்ளடங்கலாக காணி சார்ந்த பல்வேறு பிரச் னைகள் சம காலத்தில் இன்னமும் தீர்க்கப்படா மல் உள்ளன.

இப்பிரச்னைகளுக்கு சுமுகமானதும் நியாயமானதுமான முறையில் தீர்வு காணும் நோக்கில் சர்வதேச புலம் பெயர்வு அமைப்பின் (ஐ.ஓ.எம்.) அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபையால் விசேட செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

அத்தோடு இச்செயற்திட்டத்தின்கீழ் அரச கட்டமைப்புகள், படைத் தரப்பினர், சிவில் சமூக அமைப்புகள் வசமுள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் உள்ளடங்கலாக இவ்விவகாரத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரும் உள்வாங்கப்படுவர் எனவும் தெரியவருகிறது.

மேலும் இச்செயற்திட்டத்தின் ஊடாக வட, கிழக்கில் காணிப் பிரச்னைகளுடன் தொடர்புடைய தரப்பினருடன் பேச்சுகளை முன்னெடுத்தல், படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், எல்லைகளை உரியவாறு மீள்நிர்ணயிப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை உள்ளகக் கட்டமைப்புகளுக்கு வழங்கல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## மன்னாரில்...

காற்றாலை கோபுரங்களும் தோட்டவெளியில் 2 காற்றாலை கோபுரங்களும் அமைக்கப்படவுள்ளன.

குறித்த 5 காற்றாலை கோபுரங்களும் 20 மெகா வாட் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது. மேலும் ஓலைத்தொடுவாய் பகுதியில் 06 காற்றாலை மின் கோபுரங்களும், பேசாலை மேற்கில் 2 காற்றாலை மின் கோபுரங்களும் அமைக்கப்படவுள்ளது. குறித்த 8 காற்றாலை மின் கோபுரங்களும் 50 மெகா வாட் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

குறித்த 5 கிராமங்களிலும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து கிராம மக்களின் கருத்துக்களை கேட்டறிய எரிசக்தி அமைச்சர் தலைமையிலான குழுவினர் மன்னாருக்கு விஜயம் செய்த நிலையில் நேற்று முற்பகல் 10 மணி அளவில் முதலாவது கலந்துரையாடல் மன்னார் சாந்திபுரம், சௌத்பார் கிராமங்களை உள்ளடக்கி சாந்திபுரம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், து.ரவிகரன், ஜெகதீஸ்வரன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், உதவி அரசாங்க அதிபர் எம்.பிரதீப், மன்னார் நகர பிரதேச செயலாளர் கா.காந்தீபன், மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன், அழைக்கப்பட்ட திணைக்களப் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் மக்களுடன் கலந்துரையாடிய போதும் மக்கள் தமது கிராமங்களுக்குள் புதிதாக காற்றாலை மின் கோபுரங்கள் தேவை இல்லை எனவும் குறித்த காற்றாலை மின் கோபுரங்களை அமைக்க தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் கூறினர்.

மேலும் மன்னார் தீவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 30 காற்றாலை மின் கோபுரங்களால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், மீனவர்கள் தொழிலை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

தமது கிராம மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமாக இருந்தால் காற்றாலை கோபுரங்களை மன்னார் தீவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்ததோடு, தமது பகுதிக்குள் காற்றாலை அமைக்க ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம் என தெரிவித்துள்ளனர்.

எனினும் அமைச்சர் தலைமையிலான குழுவினர் மக்களுடன் கலந்துரையாடி தமக்கு சாதகமான பதிலை எதிர்பார்க்க முயற்சி செய்தபோதும் கலந்துகொண்ட அனைத்து மக்களும் தமது பகுதிக்குள் காற்றாலை வேண்டாம். அமைக்க அனுமதி வழங்க மாட்டோம் என ஒருமித்து தெரிவித்தனர். இந்த நிலையில் அமைச்சர் தலைமையிலான குழுவினர் அங்கிருந்து வெளியேறினர். குறித்த கலந்துரையாடல் தொடர்பாக ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கருத்து கேட்டபோதும் அவர் பதில் வழங்கவில்லை. (அ)

## விடுதலை...

பாதுகாப்பு அதிகாரிகள், சந்தேகத்திற்குரிய உலக தமிழ் இயக்க அலுவலகத்தை சோதனை செய்தபோதே, இந்த தொலைபேசி எண் கண்டுபிடிக்கப்பட்டதாக குளோபல் நியூஸ் குறிப்பிட்டுள்ளது.

ஹரி ஆனந்தசங்கரி லிபரல் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு, ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படும் பணம் சேகரிக்கும் திட்டம் குறித்த பயங்கரவாத எதிர்ப்பு விசாரணையின் ஒரு அங்கமாக, இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில், ஹரி ஆனந்தசங்கரி தற்போது கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக செயற்படுகிறார், அத்துடன், கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவை மற்றும் கனடா எல்லை சேவைகள் நிறுவனம் உள்ளிட்ட நாட்டின் பயங்கரவாத எதிர்ப்பு நிறுவ னங்களின் பொறுப்பாளராகவும் அவர் செயற்படுவதை குளோபல் நியூஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதியன்று இந்த ஆவணம் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஹரி ஏ." என்ற பெயருடன், ஆனந்தசங்கரி அப்போது பயன்படுத்திய தொலைபேசி எண்ணுடன் இந்த ஆவணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும், ஹரி ஆனந்தசங்கரி எந்தத் தவறும் செய்ததாக அந்த ஆவணங்களில் கூறப்பட்டிருக்கவில்லை.

இந்தநிலையில், இது தொடர்பில் விளக்கமளித்த ஹரி ஆனந்த சங்கரியின் அலுவலகம், இந்த ஆவணம் பற்றி அமைச்சருக்கு தெரியாது என்றும் அது தமிழீழ விடுதலைப் புலிகளின் கனேடிய முன்னணி அமைப்பின் அலுவலகத்தில் இருந்தது எப்படி என்று தெரியவில்லை என்றும் குறிப்பிட்டதாக குளோபல் நியூஸ் தெரிவித்துள்ளது.

இந்த ஆவணம் , 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்டதாக இருந்தது. அத்துடன், ஆழிப்பேரலையால் இலங்கையின் சில பகுதிகள் பேரழிவிற்கு உள்ளான மூன்று நாட்களுக்குப் பின்னர், பாதிக்கப்பட்ட இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்ப அரசியல்வாதிகளை வற்புறுத்திய ஒரு குழுவில் அவர் இருந்ததாகக் கூறப்படுகிறது.

ஹரி ஆனந்தசங்கரி அப்போது ஒரு சட்டக் கல்லூரி மாணவராக இருந்தார் என்றும், "பேரழிவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான இலங்கை மக்களுக்கு மனிதாபிமான நிவாரணத்தை ஆதரிப்பதற்காக இயக்கப்படும் முயற்சிகளை ஒழுங்கமைப்பதிலும் பங்கேற்பதிலும் முன்னணிப் பங்காற்றினார் என்றும் அவரின் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது என குளோபல் நியூஸ் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் குறித்த ஆவணம் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது என்பது குறித்து அமைச்சருக்கு எந்தத் தகவலும் தெரியாது. இந்த விடயம் குறித்து சட்ட அமுலாக்கல் பிரிவு ஒருபோதும் அமைச்சரைத் தொடர்பு கொள்ளவில்லை என்றும், அவர் உலகத் தமிழ் இயக்கத்துக்காக ஒருபோதும் பணம் திரட்டவில்லை என்றும் அவரது அலுவலகம் குறிப்பிட்டதாக குளோபல் நியூஸ் தெரிவித்துள்ளது. (அ)

## கால் மடித்து ...

எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை 12ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில் நேற்று 44 ஆவது நாளாக அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றுவரை 235 எலும்புகூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. 240 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், இன்று சனிக்கிழமையுடன் அகழ்வு பணிகள் நிறைவுறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அநுரவின்...

சென்றிருந்தார். இது சர்வதேசத்துக்கு வழங்கப்பட்ட ஓர் செய்தியா என அமைச்சரிடம் வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர்,

"சில அரசியல்வாதிகளின் அறிவிப்புகள் பற்றி நாம் அலட்டிக்கொள்ள தேவையில்லை. எமது நாட்டிலும் அப்படியான அறிவிப்புகளை விடுக்கும் அரசியல்வாதிகள் உள்ளனர்.

கச்சத்தீவு இலங்கைக்கு உரிய தீவாகும். இவ்விவகாரம் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் இராஜதந்திர ரீதியில் எவ்வித பிரச்னையும் எழவில்லை.

கச்சதீவுக்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயமே செய்தார். இதில் வேறு நோக்கம் இருக்கவில்லை. இலங்கைக்கு உரித்தான தீவுக்கே ஜனாதிபதி சென்றிருந்தார்." - என்று பதிலளித்தார் அமைச்சர்.

## எல்ல பகுதியில்...

வருகை தந்து மீண்டும் தங்காலை நோக்கிப் பயணித்த பஸ் சுமார் 500 அடி பள்ளத்தில் தடம் புரண்டு வீழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இக்கோர விபத்து நேற்று முன் தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன் பேருந்தில் பயணித்த 15 பேர் உயிரிழந்தனர் என்று எல்ல பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் 8 பெண்களும் 7 ஆண்களும் அடங்குகின்றனர். அத்துடன், தங்காலை நகர சபை செயலாளர் டி.டபிள்யூ.கே. ரூபசேன, 12 சபை ஊழியர்கள், இரண்டு குழந்தைகள் மற்றும் பஸ் சாரதி உட்பட 15 பேர் பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தங்காலை மாநகர சபை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சுற்றுலா சென்ற பஸ் வண்டியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 5 சிறுவர்கள் உட்பட 17 பேர் பண்டாரவளை, தியத்தலாவ வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட பின்னர் பதுளை மாவட்ட போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தின்போது பள்ளத்தாக்கின் புதர்களில் தூக்கியெறிப்பட்டவர்களை மீட்பதற்காக தியத்தலாவ இராணுவ முகாமின் இராணுவத்தினர் அழைக்கப்பட்டதுடன் பாதுகாப்புக் கம்பிகளை பயன்படுத்தி மீட்புப் பணிகள் இடம்பெற்ற வேளையில் காயமடைந்த இரு இராணுவத்தினர் பதுளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கிய பஸ்ஸில் 38 பேர் பயணித்ததாக கணக்கிடப்பட்டுள்ளதுடன் அவர்களில் 32 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர். விபத்தில் இடம்பெற்ற வேளையில் தூக்கியெறியப்பட்டு புதர்களில் சிக்கியுள்ள 6 பேரை தேடும் பணிகள் இடம்பெறவுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

## யாழ். பல்கலை...

சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தச் சட்டங்களுக்கு அமைவாக ஜனாதிபதிக்கு உண்டான நிறைவேற்றுத் தத்துவத்தின் அடிப்படையில் வாழ்நாள் பேராசிரியர் இ.குமாரவடிவேல் ஜனாதிபதியினால் முன்மொழியப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி என். எஸ். குமநாயக்கவினால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதனின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த நிலையில் புதிய வேந்தராக வாழ்நாள் பேராசிரியர் இ. குமாரவடிவேல் கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வாழ்நாள் பேராசிரியர் இ. குமாரவடிவேல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் மூத்த கல்வியியலாளராவார். பௌதிகவியல் துறையில் பேராசிரியராக விளங்கிய இவர், விஞ்ஞான பீடாதிபதியாகவும், பதில் துணைவேந்தராகவும் பதவி வகித்தவர். இவரது தகைசார் பங்களிப்பின் காரணமாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினராகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டிருந்தவர்.

பல்கலைக்கழகச் சட்டத்தின் படி, வைபவ ரீதியாகப் பதவிவழி வேந்தரே பட்டமளிப்பு விழாவின்போது, நிகழ்வைத் தலைமை தாங்கிப் பட்டங்களையும், பட்டத் தராதரச் சான்றிதழ்களையும் வழங்குவது மரபாகும். எனினும், முன்னாள் வேந்தரின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த போதிலும், புதிய வேந்தரை ஜனாதிபதி நியமிக்காத நிலையில் கடந்த மார்ச் மாதம் 19 முதல் 22 வரை நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பட்டமளிப்பு வைபவம் வேந்தர் இல்லாமலேயே நடந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 6 மாதங்களில்...

உயிரிழந்தனர்.

இலங்கையின் அண்மைய வரலாற்றில் மிக மோசமான பேருந்து விபத்தாக, 2005 ஏப்ரல் 27 ஆம் திகதி குருநாகல்-கொழும்பு பிரதான வீதியில் உள்ள யாங்கல்மோதர ரயில் கடவையில் நிகழ்ந்த விபத்து கருதப்படுகிறது.

கல்கிரியாகமவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து, வலகும்புர மற்றும் பொல்கஹவெல தொடருந்து நிலையங்களுக்கு அருகே ரயில் பாதையில் கவனக்குறைவாக நுழைந்தது. இதன் போது கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த கடுகதி ரயிலுடன் மோதி விபத்து ஏற்பட்டது. இதில் 41 பேர் உயிரிழந்த நிலையில், 35 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்துக்குப் பின்னரும் இலங்கையில் பல பேருந்து விபத்துகள் நிகழ்ந்தாலும், அவை யாங்கல்மோதர விபத்தின் தீவிரத்தை எட்டவில்லை.

இந்த நிலையில், பேருந்து விபத்துகளுக்கு முக்கிய காரணம் சாரதிகளின் கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 2023 ஆம் ஆண்டில் வீதி விபத்துகளால் 2,341 பேர் உயிரிழந்தனர். 2024 ஆம் ஆண்டில் இது 2,521 ஆக உயர்ந்திருந்தது.

இந்த நிலையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 1,256 கோர விபத்துகளில் 1, 332 பேர் உயிரிழந்தனர்.

இதில், தனியார் பேருந்து விபத்துகளில் 60 பேரும், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து விபத்துகளில் 30 பேரும் உயிரிழந்தனர்.

2025 மே 11 ஆம் திகதி ரம்பொட-கெரண்டியெல்ல பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 22 பேர் உயிரிழந்த நிலையில், 35 பேர் காயமடைந்தனர்.

இது இலங்கையின் சமீபத்திய வரலாற்றில் பதிவாகிய, மிகவும் துயரமான பேருந்து விபத்தாகப் பதிவாகியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பொருளாதார பிரச்னைக்கான தீர்வு மூலம் அமைதி, நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும்!

## வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர்



கொழும்பு, செப். 06

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு பல்வேறு பிரச்னைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கவும் பொருளாதார பிரச்னைகளுக்கான தீர்வின் மூலமாக நிலையான அமைதி, நல்லிணக்கத்தை கட்டியெழுப்பவும் உறுதியாக இருக்கிறோம் - இவ்வாறு வெளிநாட்டு இராஜதந்திரிகளு டனான சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற் றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், புதிய அரசாங்கம் என்ற ரீதியில் நாட்டின் மனித உரிமைகள் நிலவரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாறுபட்ட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன.

குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு பல்வேறு பிரச்னைகள் காணப்படுகின்றன. அவற்றுக்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதிலும் பொரு ளாதார பிரச்னைகளுக்கான தீர்வுகளின் ஊடாக நிலை யான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை கட்டி யெழுப்புவதிலும் தாம் உறுதியாக இருப்பதா கவும் அவர் எடுத்து ரைத்தார்.

இதேபோன்று, பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதற்கு முன்னெடுக் கப்பட்டுள்ள நடவடிக்கை, நிகழ்நிலை காப்பு சட்டத்தை மறுசீரமைப்பதற்கான நகர்வுகள், ஊழல் ஒழிப்பு செயல்திட்டம், கிளீன் சிறீ லங்கா செயல்திட்டம், காணாமல் போனோர் பற்றிய பணிமனை மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பன உள்ளடங் கலாக உள்ளக கட்டமைப்புக்களின் சமகால முன்னேற் றங்கள், சுயாதீன வழக்கு தொடுநர் பணிமனையை நிறு வுவதற்கான தீர்மானம் உள்ளிட்ட நகர்வுகள் பற்றியும் அமைச்சர் விஜித ஹேரத் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்த போது குறிப்பிட்டார். (ஐ)

# நாட்டின் கையிருப்பு 0.3 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, செப். 06

நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகள் 2025 ஜூலையில் 614.7 கோடி டொலரில் இருந்து 0.3 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதன்படி, கடந்த ஒகஸ்ட் மாதம் 616.6 கோடி அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கியின் சமீபத் திய தரவுகள் தெரிவிக்கின்றன. (ஐ)

# போதைப்பொருளுடன் இந்தியர் ஒருவர் கைது!

கொழும்பு, செப். 06

10.5 கோடி ரூபாய் பெறுமதியான 10.75 கிலோ குஷ் போதைப்பொருளை கடத்த முயன்றமை தொடர்பில் இந்தியர் ஒருவர் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

புதிதாக நிறுவப்பட்ட ஸ்கானிங் இயந்திரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இந்தப் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. (ஐ)

# போதைப்பொருள் தொழிற்சாலையை செயல்படுத்திய பாகிஸ்தானியர்கள்!

கொழும்பு, செப். 06

பாதாள உலகக் குழு ஒன்றின் தலைவர் கெஹெல் பத்தர பத்மேவால் நுவரெலியாவில் நடத்தப்பட்ட போதைப்பொருள் தொழிற்சாலையை பாகிஸ்தானியர் இருவர் செயல்படுத்தினர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

குறித்த போதைப் பொருள் தொழிற்சாலையை செயல்படுத்துவதற்காக வெளிநாட்டவர்களை, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவினர் நாட்டுக்கு வரவழைத்துள்ளனர் என்று அமைச்சர் கூறினார்.

கெஹெல்பத்தர பத்மேவினால் முதலீடு செய்யப்பட்டதாக கூறப்படும் குறித்த போதைப்பொருள் தொழிற்சாலை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் தொழிற்சாலைக்காக 40 இலட்சம் ரூபாயை அவர் முதலிட்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலைக்காக வீடு ஒன்று வாடகைக்கு எடுக்கப்பட்டதுடன், 2 ஆயிரம் கிலோவுக்கு மேல் இரசாயன பொருட்களும் வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# நன்னீர் மன் வள இழப்பை தடுப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, செப். 06

மீன் வளங்களின் இழப்பை தடுக்கவும் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் இரு ஆண்டுகளில் 250 நிரந்தர நன்னீர் நீர்த்தேக்கங்களில் தடுப்பு வலைகளை நிறுவும் திட்டத்துக்கு அராசாங்கம் அனுமதி அளித்துள்ளது என்று அரசாங்க தகவல் திணைக்களம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

பல்வேறு காரணங்களுக்காக நீர் திறக்கப்படும்போது, வருடந்தோறும் நன்நீர்த்தேக்கம் ஒன்றிலிருந்து 20 ஆயிரம் முதல் 40 ஆயிரம் கிலோ வரையிலான மீன்கள் அடித்துச் செல்லப்படுகின்றன.

குறிப்பாக இனப்பெருக்க திறன் கொண்ட முதிர்ந்த மீன்களின் இழப்பு, எதிர்கால மீன்வளத்தை கடுமையாகக் குறைத்துள்ளது. கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு சத்தான உணவை வழங்குவதில் நன்னீர் மற்றும் மீன் வளர்ப்பு விவசாயம் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், நாட்டிலுள்ள 95 நன்னீர் மீன் இனங்களில் 52 இனங்கள் நாட்டுக்கே உரித்தானவை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# பயங்கரவாத தடை சட்டத்தில் இந்த ஆண்டில் 49 பேர் கைது!

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, செப். 06

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கூறினாலும் அந்தச் சட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கிருலப்பனையில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

குற்றங்களை மறைப்பதற்கு இடமளிக்கப் போவதில்லையென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள நிலையில், 88 - 89 கலவரங்களின்போது செய்யப்பட்ட குற்றங்கள் குறித்து லால்காந்தவிடம் விசாரிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி அநுர எப்போதும் சட்டத்தின் ஆட்சி பற்றிப் பேசுகிறார். முன்னிலை சோசலிசக் கட்சி சமீபத்தில் தாக்கப்பட்டது. அதன் காணொலி ஆதாரங்கள் அழிக்கப்பட்டன. ஜே. வி. பியின் நடத்தை தெளிவாகத் தெரிகிறது. சட்டவிரோதமாக நுழைந்து தாக்குதல் நடத்தியது உட்பட பல குற்றச் செயல்கள் இங்கு நடந்துள்ளன.

இது, பெலவத்தையிலிருந்து வந்த உத்தரவாக இருக்க வேண்டும். இவர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடுப்பு சட்டம் இரத்துச் செய்யப்படும் என்று ஜனாதிபதி கூறினார். ஆனால், இந்த ஆண்டு அந்தச் சட்டத்தின் கீழ் 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது ஓர் ஆபத்தான சூழ்நிலை - என்றார். (ஐ)

# எல்ல பஸ் விபத்து; மகிந்த கவலை

கொழும்பு, செப். 06

எல்ல - வெல்லவாய வீதியில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் பலியாகினர். இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்

"துயரத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன். இந்த கடினமான தருணத்தில் நாட்டின் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் உங்களுடன் இருக்கும்", என்று அவர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அதிக விலைக்கு அரிசி ரூ. 9.5 கோடி அபராதம்!

கொழும்பு, செப். 06

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த வியாபாரிகளுக்கு இந்த ஆண்டில் தொடர்பில் 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நுகர்வோர் விவகார அதிகார சபையால், 2025 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரை 14 ஆயிரத்து 682 சோதனைகள் நடத்தப்பட்டன. இதில், அரிசி தொடர்பில் 2 ஆயிரத்து 800 சோதனைகள் நடத்தப்பட்டன. இவற்றில் 915 சோதனைகள் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்தவை தொடர்பானவை.

இது தொடர்பாக நீதிமன்றங்களில் தாக்கல் செய்த வழக்குகளில் 9.5 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு அரிசி விற்பது நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் கீழ் ஒரு கடுமையான குற்றமாகும். குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து, ஒரு இலட்சம் ரூபாய் முதல் 5 இலட்சம் ரூபாய் வரை அபராதம் அல்லது ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சந்திராணிமீதான வழக்கு செப். 23இல் விசாரணைக்கு!

கொழும்பு, செப். 06

முன்னாள் அமைச்சர் சந்திராணி பண்டாரவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டில் கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கை எதிர்வரும் 23 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சஹான் மாபா பண்டார முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்து குற்றப்பத்திரிகையை திருத்த அனுமதி கோரினார்.

திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையின் நகலை பிரதிவாதி சட்டத்தரணிகளுக்கு வழங்க உத்தரவிட்டார்.

பின்னர் வழக்கை செப்ரெம்பர் 23 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டது.

ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் மீது கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு 11 குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மஹாநாமா தேசிய விளையாட்டு உறுப்பினர் பதவியை துறந்தார்

கொழும்பு, செப். 06

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரொஷான் மஹாநாம தேசிய விளையாட்டு சபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அவர் தனது தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

விளையாட்டு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதே தேசிய விளையாட்டு சபையின் பிரதான பணி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org